(v) 'மாலை மணி' நாளிதழில் ஒருறுப்பினர் பேரவையைக் கூட்டவேண்டுமென்று கோரியதுபற்றி விமர்சித்து வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 'மாலை மணி' என்ற பத்திரிகையைப்பற்றி, திரு. செ. பாலசுப்பிரமணியன் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார். அதில் "சென்ற மாதம் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது ஏற்பட்ட பதட்ட நிலைபற்றி விவாதிக்கச் சட்டப்பேரவையின் அவசரக் கூட்டத்தைக் கூட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கக் கோரி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கோரி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு கடிதம் எழுதினேன். அதுபற்றி என்னைப் பத்திரிகை நிருபர்கள் கேட்டபொழுது, அவ்விதம் கோரப்போவதாகத் தெரிவித்தேன். சட்டசபை அங்கத்தினர் என்ற முறையில் என் கடமையை நான் செய்யும் போது, சென்னையிலிருந்து வெளியாகும் 'மாலை மணி' என்னும் நாளிதழ் 31—12—1967 தேதிய வெளியீட்டில் நான் அவ்வாறு கோரியதைக் கேவலமாக விமர்சித்தும், என்னைப் பயமுறுத்தியும் விமர்சித்திருக்கிறார்கள். அந்த இதழையும் இத்துடன் அனுப்பி யிருக்கிறேன். குறிப்பிட்ட அக்கட்டுரை சட்டசபை அங்கத்தினரின் உரிமையை மீறியதாகுமென நான் கருதுகிறேன்." என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே, 'மாலை மணி' நாளிதழ் ஆசிரியர், வெளியிடுபவர் ஆகியோர்மீது உரிமை மீறல் பிரச்சினை இருப்பதாகச் சொல்கிறார்.

நான் அந்தப் பத்திரிகையில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதைப் படிக்கக் கடமைப்பட்டிருந்தாலும், அதைப் பேரவையில் படிப்பது நன்றாக இருக்காது என்பதினால் நான் வாசிப்பதற்கில்லை. அந்த ஆசிரியருக்கு எழுதி, ஓரளவுக்கு விளக்கம் கேட்டு, என்ன நிலைமையில் அம்மாதிரிப் பிரசுரிக்கப் பட்டது என்று கேட்க இருக்கிறேன். கேட்ட பிறகு, இதை மீண்டும் நாம் எடுத்துக்கொள்ளலாம்.

(vi) அவிநாசி வட்ட திராவிட பொரி-கடலை உற்பத்தியாளர் முன்னேற்ற சங்கம் வெளியிட்ட துண்டுப் பிரசுரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்தபடியாக, அவிநாசி வட்ட திராவிட, பொரி-கடலை உற்பத்தியாளர் முன்னேற்றச் சங்கம் என்பவர்கள் மணிவாசகர் அச்சகம், அவிநாசி என்ற அச்சகத்தில் அச்சிட்டு ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அந்தத் துண்டுப் பிரசுரத்தின் வாசகம் பேரவையின் உரிமையை மீறியிருப்பதாக திரு. செ. பாலசுப்பிர மணியன் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது பேரவையின் உரிமைகளை மீறியிருப்பதாக இருக்கிறது என்பதிலே எந்தவிதமான ஐயப்பாடும் கிடையாது. ஆனால் இம்மாதிரி ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டவர்மீது இந்தப் பேரவை தனது

நேரத்தையும், காலத்தையும் செலவு பண்ணவேண்டியதில்லை என்ற காரணத்திற்காக, சம்பந்தப்பட்டவர்களுக்கு—அந்த மணிவாசகர் அச்சகத்திற்கும் பொரி-கடலை உற்பத்தியாளர் முன்னேற்ற சங்கத்திற்கும்—அவர்கள் அவையின் உரிமைகளை மீறியுள்ளார்கள் என்பதைக் குறித்து நான் எச்சரிக்கைசெய்து எழுதுவதாக இருக்கிறேன். அதுவே போதும் என்று கருதுகிறேன். ஏனென்றால், 'De Minimus Non Curat Lex' என்ற கொள்கைக்கு இணங்க, இந்த மாதிரிச் சிறிய காரியங்களைச் சட்டம், சட்டப் பேரவை பொருட்படுத்தக்கூடாது.

திரு. செ. பாலசுப்பிரமணியன்: அதை முழுவதும் படித்து விட்டால், அது எப்படி நடந்திருக்கிறது என்பது தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: படிக்கவேண்டாம், நன்றாக இருக்காது.

திரு. பி. வேலுசாமி: இந்தச் சிறிய காரியங்களை வளர விட்டாலும் ரொம்பவும் அதிகமாகப் போய்விடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த முறை எச்சரித்து விடலாம். எத்தனையோ துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப் படுகின்றன. பேரவையின் விலை மதிக்க முடியாத நேரத்தையும், காலத்தையும் இப்படிப்பட்ட காரியங்களில் செலவழிக்கக்கூடாது என்பது என் கருத்து மட்டுமல்ல, நடைமுறையும் அதுவேயாகும்.

(vii) தலைமைச் செயலகத்திற்கு வருகிறவர்களைக் கட்டுப்படுத்த வெளியிடப்பட்டுள்ள தலைமைச் செயலாளரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் அரசாங்கத் தலைமைச் செயலாளர் (சீஃப் செகரடரி டு கவர்ன்மெண்டு) வெளியிட்ட அறிக்கை இங்கே உள்ளே வருகிறவர்களுக்குச் சில கட்டுப்பாடுகளை விதித்திருப்பதால் பேரவையின் உரிமையையும், பேரவைத் தலைவரின் உரிமையையும் மீறியிருப்பதாக எழுதியிருக்கிறார். அதை முற்றிலும் வாசித்துப் பார்த்த பிறகு, பேரவைத் தலைவருடைய அதிகார வரம்பிற்குள் தலைமைச் செயலாளர் பிரவேசிக்க இல்லை. அதில் எந்தவிதமான அவை உரிமைக் கேள்வியும் இல்லை. No *prima facie* case has been made out என்று தீர்ப்புச் சொல்கிறேன்.

(viii) பேரவைத் தலைவர்பற்றி ஒரு பத்திரிகையில் வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்தது. நண்பர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் ஒரு பத்திரிகையில் பேரவைத் தலைமையைப்பற்றி ஏதோ எழுதியிருப்பதாகவும், அது உரிமைப் பிரச்சினையின்கீழ் வருவதாகவும் எழுதியிருக்கிறார். அதைத் தள்ளுபடி செய்வதா, இல்லையா என்பதுகூட நான் சொல்ல முடியாது. என்னைப்பற்றி ஏதோ தாக்குறைவாக எழுதியிருக்